# கற்பகம்
திங்கள் இதழ்
Katpakam
விலை ரூபா 10.00


## குறளமுதம்–71

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதத் தரும்.

**அதிகாரம்–6 அறத்துப்பால் அன்புடைமை**

அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்
புன்கண்நீர் பூசல் தரும்

அன்புக்கும் அடைத்து (மறைத்து) வைக்கும் தாழ்ப்பாள் உள்ளதோ? அன்புடையார் சிந்தும் சிறு கண்ணீரே உள்ளேயிருக்கும் அன்பைப் பலரும் அறியப் பறைசாற்றிவிடும்.


மலர்–06 நவெம்பர் –2013 இதழ்–71


### பனைசார் உற்பத்திகளில் பனை தென்னை வள சங்கங்கள் முழுவீச்சில் ஈடுபட



# தேவையான உதவிகளை எமது சபை வழங்கும்!

**--பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம்--**

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் இணைந்துள்ள 19 ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் அங்கத்தவர்களுடைய வாழ்வாதார மேம்பாட்டுக்காக பனை அபிவிருத்திச் சபை பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

அந்த வகையில் இவ் அங்கத்தவர்களினால் உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்திப் பொருட்களின் தரத்தை உயர்த்தும் நோக்கோடு அது தொடர்பான ஆராய்ச்சிகளை கைதடியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொண்டு வருகின்றோம்.

மேற்கண்டவாறு தெரிவித்தார் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு பசுபதி சீவரத்தினம் அவர்கள்.

கடந்த மாதம் வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் நடாத்தப்பட்ட 91வது சர்வதேச கூட்டுறவுதின விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

பனை அபிவிருத்திச் சபையின் கோரிக்கைக்கு அமைய இந்திய அரசால் வழங்கப்பட்ட நவீன

(2ம் பக்கம் பார்க்க)

## கிளைமுகாமையாளர் பயிற்சி

கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைமுகாமை யாளர்களுக்கான பயிற்சி நெறி இம்மாதம் 11ம் திகதி சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு க.துரைசிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

(8ம் பக்கம் பார்க்க)

## முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி

மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிநெறி ஒன்று இம்மாதம் 16ம் திகதி



சங்க மண்டபத்தில்

(8ம் பக்கம் பார்க்க)

## நெறியாளர்சபை உறுப்பினர் பயிற்சி

கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் நெறியாளர் சபை உறுப்பினர்களுக்கும் கிளைக்குழு உறுப்பினர்களுக்குமான பயிற்சிக் கலந்துரையாடல் ஒன்றை இம் மாதம் 23ம் திகதி சங்க மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் தலைமையில் நடத்துவதற்குரிய ஏற்பாடுகளை சமாசம் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## முதலுதவிப் பயிற்சி நடத்த ஏற்பாடு!

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களால் மூச்சுத் திணறல் தொடர்பான முதலுதவிப் பயிற்சி இம்மாதம் 28ம் திகதி சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் சமாசத் தலைவர் திரு நா.கணேசன் அவர்கள் தலைமையில் நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இம்முதலுதவிப் பயிற்சியில் சங்கங்களின் அங்கத்தவர்கள், பணியாளர்கள், ஆகியோர் கலந்து கொண்டு பயன்பெறலாம் எனவும், முன்பு நடை பெற்ற பயிற்சி நெறியில் கலந்து கொண்டவர்களையும் இதில் கலந்துகொள்ளுமாறு சமாசத்தால் கேட்கப்பட்டுள்ளது.

## 91வது கூட்டுறவுதின விழா

கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின் 91வது சர்வதேச கூட்டுறவுதின விழாவும் பரிசளிப்பு விழாவும் இம்மாதம் 25ம் திகதி சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் திரு செ.செல்வராசா அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் முதன்மை விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு வீ.கே.அருந்தவநாதன் அவர்களும், கௌரவ விருந்தினர்களாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு பசுபதி சீவரத்தினம், சமாசத் தலைவர் திரு நா.கணேசன்,

(7ம் பக்கம் பார்க்க)

**சிந்தனைத்துளி**

"அன்பும் சாந்தமும் உடையவனே, பலமும் மனோ தைரியமும் உடையவனாவான்"

-அறிஞர்-

## கற்பகக்கரு

### தகுதியானவர் வேண்டும்!

எமது நாட்டில் கூட்டுறவு இயக்கமானது மக்கள் சிந்தனையில் இருந்தே தோன்றியுள்ளது என்பதனை வரலாற்று நிழ்வுகளிலிருந்து நாம் அறிந்துகொள்ளலாம். அப்போது இருந்த சமூக, பொருளாதார நிலையும் சர்வதேச ரீதியாக கூட்டுறவு சிந்தனையின் வெளிப்பாடும் இவ் அமைப்பு உருவாக ஒரு காரணமாக இருந்துள்ளது.

எமது பனை தென்னை வள கூட்டுறவு அமைப்பும் இச்சமூகத்தின் முன்னோடிகளால் உருவாக்கப்பட்டதன் பயனாக அவ்வளத்தை நம்பிவாழும் அங்கத்தவர்கள் தமது வாழ்வாதாரத்தினை கடந்த 41 வருடங்களாக ஓரளவு முன்னேற்றகரமான நிலையில் கொண்டு செல்வதற்கு வாய்ப்பாக அமைந்திருக்கின்றது.

கூட்டுறவுப் பண்புகளாகிய சிறந்த திட்டமிடல், அதனை ஒழுங்காக செயற்படுத்தல் மூலம் அங்கத்தவர்களின் பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், கலை, கலாச்சாரம் போன்றவற்றில் தம்மை வளர்த்துக் கொள்வதற்கு உறுதுணையாக இருக்கின்றது கூட்டுறவு.

பனந்தொழில் வல்லுநர்களுக்கு கூட்டுறவு அமைப்பு ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருப்பதை நாம் இச்சங்கங்களினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற பாரிய நலத்திட்டங்களை நோக்கும்போது அறிந்துகொள்ளமுடிகின்றது.

இந்நிறுவனங்களை வழிநடத்துகின்றவர்கள் இந்நிறுவனத்தில் பற்றும் விசுவாசமும் கொண்டவர்களாகவும் ஏனையவர்களின் துன்ப துயரங்களை அறிந்துகொண்டு அவற்றை போக்குவதற்கு துணைபுரியும் நற்சிந்தனைமிக்கவர்களாகவும் வளர்ந்திருப்பது பாராட்டுக்குரியதே.

எமது சங்கங்கள் உற்பத்தியாளர்களையே அங்கத்தவர்களாக கொண்டனவாக செயற்பட்டு வருகின்றன. இவ்வளம் சார்ந்த உற்பத்தியில் தன்னை பூரணமாக ஈடுபடுத்திக்கொண்ட ஒருவருக்கே அவ்வுற்பத்தி தொடர்பாகவும் அதில் காணப்படக்கூடிய இடர்பாடுகள் தொடர்பிலும் அறிந்துகொள்ளமுடியும்.

கூட்டுறவு அமைப்பு ஒரு ஜனநாயக அமைப்பாக இருப்பதினால், ஜனநாயக ரீதியில் கிளைக்குழு உறுப்பினர்கள், பொதுச்சபை உறுப்பினர்கள், நெறியாளர்குழு உறுப்பினர்கள் தெரிவுகள் இடம்பெறும்போது மேலே குறிப்பிட்ட விடயங்களை கவனத்தில்கொண்டு அதற்குரிய தகதியுடையவர்கள் தெரிவுசெய்யப்படுவார்களேயானால் அந்நிறுவனத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் தமது நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்ள வாய்ப்பாக அமையும்.

இவ்வாறு தெரிவுசெய்யப்படும் புதிய உறுப்பினர்கள் தம்மை கூட்டுறவுத் துறையில் வளப்படுத்திக் கொள்வதற்கு உரிய கல்விப் பயிற்சிகள் அவசியம். இப்பயிற்சிகளை இத்துறைசார்ந்த நிறுவனங்களுடன் இணைந்து வழங்குவதற்கு சமாசம் எப்போதும் தயாராகவே உள்ளது என்பதை கற்பகம் சுட்டிக்காட்ட விரும்புகின்றது.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்" ஆசிரியர்

## ஏழைகளின் தோழன் கூட்டுறவு!

சமாசத்தால் 91வது சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு உறுப்புரிமைச் சங்கங்களின் அங்கத்தவர்களுக்கிடையே நடத்திய கட்டுரைப் போட்டியில் 1ம் இடம் பிடித்த கோண்டாவில் சங்க அங்கத்தவரான **திரு செ.யேசுதாசன்** எழுதிய கட்டுரை பிரசுரமாகிறது.

கூட்டுறவு ஏழைகளின் தோழன் என்றும், நாட்டுயர்வுக்கு அவசியம் என்றும் எல்லோராலும் பேசப்படுகிறது. கூட்டுறவால் சகல மக்களுக்கும் பலப் பல நன்மைகள் ஏற்படுகின்றன. பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தால் நியாய விலையிலும் இலவசமாகவும் (நிவாரணம்) அரிசி, மா, சீனி, பருப்பு, நெத்தலி போன்றன வழங்கப்படுவதால் ஏழைகள் ஓரளவு தமது பசியை போக்கமுடிகிறது. இதனால் அது ஏழைகளின் தோழனாகிறது.

இதேபோல பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திலும் அதன் முதுகெலும்பாக தொழில்புரியும் அங்கத்தவர்களும் பணிபுரியும் பணியாளர்களும் நிர்வாகிகளும் விளங்கி அதனை திறம்பட நடத்திவருகிறார்கள். இச்சங்கத்தின் மூலமும் அங்கத்தவர்களின் உழைப்பை உரிய வகையில் சேமிப்பதற்கு கட்டாய சேமம், சாதாரண சேமம் போன்ற சேமிப்புக்களையும், விபத்து நிதி, கல்வி நிதி, முன்பள்ளிகளை நடத்துதல், நியாய விலைக் கடைகள் நடத்துதல் போன்றவற்றின்மூலம் அங்கத்தவர்களின் பொருளாதார நெருக்கடிகளை தணித்து ஏழை மக்களின் வாழ்வை உயர்த்தி ஏழைகளின் தோழனாக திகழ்கின்றது.

சங்கங்களை ஒருங்கிணைக்கும் கொத்தணிகள், சமாசம் என்பனவும் பல்வேறு நலத்திட்டங்களை மேற்கொண்டு ஏழை அங்கத்வரகளின் தோழனாக திகழ்கின்றன. குறிப்பாக சமாசத்தால் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படுவதுடன், பாடசாலை உபகரணம் வழங்கல், 5ம் ஆண்டு புலமைப்பரிசில் சித்தி, க.பொ.த. (சா/த, உ/த) சித்தி பெற்றவர்களுக்கு ஊக்குவிப்பு நிதியளித்தல் போன்ற செயற்பாடுகள் மூலம் ஏழைகளின் தோழனாக விளங்குகின்றது.

இதேபோல கொத்தணிகளும் பல்வேறு நன்மைகளை செய்து வருகின்றன. கல்வி ஊக்குவிப்பு நிதி வழங்கல், பாடசாலை உபகரணம் வழங்கல் போன்றவற்றுடன் வேறும் பல உதவிகளை வழங்கி வருவதனால் ஏழைகளின் தோழனாகின்றன.

மேலும் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சங்கம், சி.க.வ. கூ.சங்கம் போன்றனவும் ஏழைகளுக்கு கடனுதவிகளை வழங்கி அவர்களுக்கு உதவி ஏழைகளின் தோழனாகத் திகழ்கின்றன.

### தேவையான உதவிகளை .......... 1ம் பக்கத் தொடர்ச்சி

தொழில்நுட்ப இயந்திர சாதனங்கள்மூலம் இவ் ஆய்வுகளை மேற்கொண்டு வருவதோடு, இவ் ஆய்வுகளின் பயன்களை விரைவில் வெளிக்கொணர உள்ளோம்.

பனை அபிவிருத்திச் சபையிடம் 20 ஆயிரம் லீற்றர் பனங்களி கோரப்பட்டிருந்தும் எம்மால் அந்தத் தொகையை வழங்க முடியாதிருக்கின்றது. பனை தென்னை வள சங்கங்கள் பனங்களி உற்பத்தியில் ஈடுபட்டிருப்பின் அதனை பனை அபிவிருத்திச் சபையின் மூலம் விநியோகித்திருக்க முடியும். எதிர்வரும் காலங்களில் பனையில் இருந்து பெறக்கூடிய அனைத்துப் பயன்களையும் உச்ச நிலையில் பெற்றுக்கொள்ள சங்கங்கள் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இதற்கான ஒத்தாசைகளை பனை அபிவிருத்திச் சபை என்றென்றும் வழங்கி உதவும் என்றார்.

யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு வீ.கே.அருந்தவநாதன் அவர்கள் தனதுரையில்,

யாழ்.மாவட்டத்தில் செயற்படுகின்ற கூட்டுறவு அமைப்புக்களில் உற்பத்தியாளர்களையே அங்கத்தவர்களாகக் கொண்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் மிகச்சிறப்பாக தம்து செயற்பாட்டினை மேற்கொண்டு வருவதை (6ம் பக்கம் பார்க்க)

# ஒரு கூட்டுறவு அமைப்பில் அங்கத்தவர்களும் பணியாளர்களும் இரு கண்கள் போன்றவர்கள்!

கூட்டுறவு அமைப்பு என்பது ஒன்றுபட்டு உழைக்கும் ஒரு நிறுவனம் ஆகும். கூட்டுறவு நிறுவனம் ஆனது இலாப நோக்கம் கருதி நிறுவனத்தின் நோக்கத்தின் பால் செயற்படும். ஒரு பக்கம் அங்கத்துவம் வகிக்கும் அங்கத்தவர். மறுபக்கம் நிறுவனத்தின் சகல நடவடிக்கைகளையும் கட்டிக் காக்கும் நிறுவன செயற்பாட்டில் பங்கு பற்றிசேவையாற்றும் பணியாளர்கள்.

கூட்டுறவு அமைப்பில் ரூபா100 பங்குப்பணம் செலுத்தி அங்கத்துவம் பெறுபவர்கள் அங்கத்தவர்கள். அதே போல நிறுவனத்தின் செயற்றிறன் மிக்க கட்டுப்பாட்டின்கீழ் நிறுவனத்தின் சகல கடமைகளையும் நிறைவேற்றுபவர்கள் பணியாளர்கள். கூட்டுறவு அமைப்பு தோற்றம்பெற்றது 1844ம் ஆண்டு இங்கிலாந்து தேசத்தில். அப்போது 28 நெசவுத் தொழிலாளர்கள் ஒன்றுசேர்ந்து அந்தக் கூட்டுறவு அமைப்பை தோற்றுவித்து வளர்த்தார்கள் அன்று. அதேபோல இக்காலத்தில் நாம் வாழும் இப்பரந்துபட்ட உலகில் இறைவன் மனிதனைப் படைத்தான். இவ்வுலகை அவன் நன்றாகப் பார்த்து நல்லது, கெட்டதை அறிந்து செயற்படுவதற்கு இரண்டு கண்களைப் படைத்தான். இரண்டு கண்களும் மனித வாழ்வுக்கு எவ்வாறு முக்கியமானதோ, அதாவது கண் நாம் என்ன செய்வது? எதைச் செய்வது? நல்லதை செய்! தீயதைச் செய்யாதே!. நல்வழிசெல்! தீயவழி செல்லாதே! என எம்மை வழிப்படுத்துவது இரு கண்களே! ஒரு கண்ணை இழந்தவன் தன்னை சுற்றியுள்ள ஒரு பக்கத்தை பார்க்கமுடியாதவனாகி அப்பகுதியில் உள்ள நல்லதை உள்வாங்கவோ, கெட்டதை அழிக்கவோ முடியாதவனாகி அரை மனிதனாகிறான். அதேபோல இரண்டு கண்ணும் இல்லாதவன் குருடன் என்பதால் வெளிச்சமான பாதையும் அவனுக்கு இருளாகவே இருக்கும்.

கூட்டுறவின் கட்டுமானத்துக்கு அடிப்படையான அங்கத்தவர்களையும், அதனை கட்டுக்கோப்பாக வைத்து வழிநடத்தும் பணியாளர்களையும் மேற்சொன்ன மனிதனின் கண்களுக்கு உவமானமாகக் கொள்வது சாலப் பொருத்தமுடையதாகும்.

ஒரு கூட்டுறவு அமைப்பு தோற்றம் பெறுவதெனில் குறைந்தது 10 பேர் சேர்ந்து ரூபா 100 பங்குப் பணம்செலுத்தி அங்கத்துவம் பெறும் உறுப்பினர்கள், இக்கூட்டுறவுச் சங்கத்தின் நோக்கத்தின்பால் செயற்படுவார்கள். இவர்கள் நிறுவனத்தின் ஒரு கண் போன்றவர்கள்.

ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் ஆளணிக் கோப்புக்கு அமைவாக சங்க நிர்வாகத்தினாலும் கூட்டுறவு வேலையாள் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்துக்கு அமைவாகவும் விண்ணப்பம்கோரி, அதற்கமைய நேர்முகத் தேர்வுசெய்து, முகாமை அமைப்பு வரைபடத்தின்படி சங்கத்தின் முகாமைத்தர உத்தியோகத்தர்கள், நடுத்தர முகாமை உத்தியோகத்தர்கள், அடுத்து இயங்கு நிலைப் பணியாளர்கள் என அனைவருமே ஒன்றுசேர்ந்து கூட்டுறவு நிறுவனத்தின் இயக்கத்துக்கு அவசியமான நிதியை ஈட்டக்கூடிய இலாபத்தைப் பெறுவதற்காக ஒவ்வொரு பணியாளர்களும் தமக்கு வழங்கப்பட்ட கடமைப் பட்டியலுக்கு அமைவாக மற்றைய பணியாளர்களில் குறைகளைக் காணாது, தனது கடமைகளை நிறுவன வளர்ச்சி கருதி செவ்வனே செய்தல் வேண்டும்.

அங்கத்தவர்கள் 10 பேர் சேர்ந்து அமைக்கும் சங்கமானது, அதன் உச்ச எண்ணிக்கை 100ற்கு மேற்பட்டதாகவும் இருக்கலாம். அதில் பொதுச்சபை தெரிவுசெய்யப்பட்டு, அதிலிருந்து சங்கத்தின் 7 அல்லது 9 அல்லது 11 பேர் கொண்ட நிர்வாக சபை ஒன்று உருவாக்கப்பட்டு மாதாந்தம் ஒரு கூட்டம் கூடி, நிறுவன செயற்பாடுகளுக்கான வரவு-செலவுத் திட்டம் ஒன்றைத் தயாரித்து, அவ் வரவு-செலவுத் திட்ட ஒப்பீட்டின்படி மாதாந்த இலாபம் ஏற்படும் விதத்தில் சகல தீர்மானங்களையும் நிறைவேற்றுவது நிர்வாகிகளாக உள்ள அங்கத்தவர்களே.

அடுத்து நிர்வாக சபையால் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை சங்கத்தின் வளங்களின் வசதிக்கேற்ப திட்டமிட்டு முகாமை செய்து சங்கத்தினை வெற்றிகரமாகவும் தொடர்ச்சியாகவும் வழி நடத்துபவர்கள் முகாமையாளர், கணக்காளர், கணக்குப் பதிவாளர், லிகிதர், தட்டெழுத்தாளர், காசாளர், களஞ்சியப் பொறுப்பாளர், பாதுகாப்பு உத்தியோகத்தர் போன்ற பணிகளைச் செய்கின்ற பணியாளர்களே.

**சமாசத்தால் 91வது சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு உறுப்புரிமைச் சங்கங்களின் பணியாளர்களுக்கிடையே நடத்திய கட்டுரைப் போட்டியில் 2ம் இடம் பிடித்த வலிகாமம் கொத்தனிப் பணியாளரான திருமதி வி.மாலினி எழுதிய கட்டுரை பிரசுரமாகிறது.**

நிறுவனத்தின் சொத்துக்களை சுரண்டாது, லஞ்சம் பெறாது, பணியாளர்களை பக்கம் சார்ந்து நடத்தாது, தமது ஆளுமையால் நிறுவனத்தை தமது கட்டுப்பாட்டில் வைப்பவர்கள் கூட்டுறவு நிறுவனத்தின் அங்கத்தவர்களும் பணியாளர்களுமே!

எனவே, ஒரு கூட்டுறவு அமைப்பு தனது நோக்கத்தின்பால் செயற்படுவதற்கு அங்கத்துவம் வகிக்கும் அங்கத்தவர்கள் மனிதனுக்கு இயற்கை தந்த வரப்பிரசாதங்களில் ஒன்றான ஒரு கண் போன்றவர்கள். நிறுவனத்தின் செயற்பாட்டுக்காக நாளாந்தம் 8 மணித்தியாலங்கள் அயராது உழைக்கும் பணியாளர்கள் மறு கண் போன்றவர்கள்.

இரண்டு கண்களும் நல்ல நிலையில் இருந்தால்தான் நாம் இந்த உலகை பார்த்து,

(7ம் பக்கம் பார்க்க)

## வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூ

# 91வது சர்வதேச கூட்டுறவுதின



## ட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் நடாத்தப்பட்ட

# விழா நிகழ்வுகளின் நிழல்கள்



## சமதர்மவாதிகள்!

சாதிமதபேதம் தன்னை
சாய்த்திடுவோம் இம்மண்ணில்—என்று
மேடையேறிப் பேசிடுவார்
மேதைகள் என்றும் தம்மைக் கூறிடுவார்
வீடு வந்து சேர்ந்து விட்டால்
வீட்டுக்குள் வராதேயென ஏழைதனை
விரட்டிவிடும் இவர்கள்தானா
சமதர்மவாதிகள்?
சீதனம் எனும் பெயர் கொண்டு
செல்வச் சீமானாய் வாழ்ந்தவர்களை
வீதிக்கு கொண்டு வந்து விட்டுவிட்டு
வீறாப்பு பேசும் இவர்கள்தானா
சமதர்மவாதிகள்?

## ஏமாற்றிவிடாதே!



உலகில் நீயின்றி
எதுவுமில்லை
என்பர்!
உனது ஆட்சியே
இன்றெங்கும்!
படித்தவனாய்
இருப்பினும் - நீயின்றி
பாரினில் எதுவுமே செய்யலாகாது!
இல்லையென்று சொல்பவர் மத்தியில்
இருப்பவர் இடத்திலேயே இருக்கின்றாய்!
கல்லான மனமுள்ளோருக்கென்றும் - நீ
காவலனாய் இருக்கின்றாய்!
நேர்மையாய் நாமிருந்தால்
நேரில் நீ வருவாயென்ற முன்னோரின்
சொல் நம்பி நானிருக்க - என்னை
சொந்தம் கொண்டாட நீயில்லையே!
இருந்தும் உனைத் தேடுகின்றேன்
இனிதாய் என் வாழ்வை மாற்ற
எங்கேதான் இருக்கின்றாய் பணமே!
ஏமாற்றிவிடாதே என்னை!

**சுரலாவ பிறேம்**



## தூங்காதே பெண்ணே!

தூங்காதே பெண்ணே - உன்
உறக்கத்தில் உரிமை பறிபோகும்
உழைப்பு வீணாகும் - உன்
கட்டுடல் நசுங்கிப்போகும்
உன்னைப் பார்த்து உலகமே சிரிக்கும்

பெண்ணே......!
நில்.....! கவனி......! புறப்படு........!
எங்கே......?
பெண்ணை வாழவைக்க

திரைப்படத்தின் கைப்பிள்ளை என்றும்
கொடிதூக்கும் கிளிப்பிள்ளை என்றும்
வேடமறியா அப்பாவிப் பிள்ளை என்றும்
கோஷம் போடும் சப்பாணிப் பிள்ளை என்றும்
வைகிறார்களே.....! இன்னுமா நீ
உன் வாழ்வில் நிமிரவில்லை?

முடியாது என்கின்ற வார்த்தை- உன்
அகராதியில் இல்லை!
துடிக்கின்ற பெண்ணே
தோகையாய் எழுந்தால்
தோல்விக்கு இடமேது
பெண்ணாலே முடியும்
தடையெல்லாம் உடையும்
அதுவரை........?
பெண்ணே நீயும்
கேள்விக்குறியே....!

**பா.மதனபாரதி-அல்வாய்**

## கல்வி எனும் ஆயுதம்



நிலையான ஒரு சமூகத்தில்
நிம்மதியான ஒரு வாழ்வை
தந்தது நிரந்தரமான கல்வியே!

கசப்பாக இருக்கும் கல்வியினை
கரும்பாக உண்ண வைத்து – எம்மை
ஏற்றி வைப்பதும் கல்வியே!

பகல் கனவை போக்கி –எம்
கற்பனைகளை நிஜமாக மாற்றி
நல் வாழ்வளிப்பதும் கல்வியே!

நுண்ணறிவு கொண்ட எம்மை
பேரறிவாளனாக மாற்றி சமூகத்தில்
மதிப்பை தர செய்வதும் கல்வியே!

மனிதனின் உயர்வையும் தாழ்வையும்
அவன் வாழும் சமூகத்தின் மூலம்
வெளிக் கொணர்வதும் கல்வியே!

தடைக்கற்களையெல்லாம்
படிக்கற்களாக மாற்றி
நற்பிரசையாக்குவதும் கல்வியே!
ஒரு நொடியில் பற்பல
வித்தைகளைக் கற்றுத்தருவது
கல்வி எனும் ஆயுதமே!

**சீதாராம், பருத்தித்துறை**

**தேவையான...**2ம் பக்கத் தொடர்ச்சி

இவ்விழாவின்மூலம் நான் காண்கின்றேன். இவ்விழாவானது பல இலட்சம் ரூபா செலவில் நடைபெறுகின்றமையும் அச்செலவீனங்கள் வீண்விரயம் செய்யப்படாது இந்நிறுவனங்களை உயர்ந்த நிலைக்கு வளர்த்தவர்களுக்கே பரிசுப் பொருட்களாக வழங்கப் படுவதையும் அவர்களுக்கு மட்டுமல்லாது அவர்கள் சார்ந்த பிள்ளைகளுக்கும் இப் பயன்கள் கிடைப்பதையிட்டு நான் மன நிறைவடைகின்றேன்.

யாழ்.மாவட்டத்தில் எத்தனையோ வகையான கூட்டுறவு அமைப்புக்கள் செயற்பட்டு வருகின்ற போதிலும் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கிய அதன் அங்கத்தவர்கள் தமது ஓய்வுகாலத்தில் (60 வயது) மாதாந்தம் ஓய்வூதியம் பெறும் திட்டத்தை இலங்கையிலேயே பனை தென்னை வள நிறுவனங்களே சிறப்பாக செயற்படுத்தி வருகின்றமை பாராட்டுக்குரியது. சுமார் 500ற்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் மாதாந்தம் ஓய்வூதியம் பெறுகின்ற திட்டத்தினையும் தமது நிறுவனத்தில் பணிபுரிகின்ற பணியாளர்களுக்கும் ஓய்வூதியத் திட்டத்தை செயற்படுத்தவதற்கு நிதியுதவி புரிந்து ஏனைய சங்கங்களுக்கு முன்மாதிரியாக செயற்பட்டமை இச்சங்கங்களே என்றார்.

அடுத்து மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் திரு பொ.மோகன் அவர்கள் தனதுரையில்,

அங்கத்தவர்கள், பணியாளர்களின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு எவ்வளவு முக்கியத்துவத்தை கொடுக்கின்றார்கள் என்பதை இன்றைய விழாவில் கௌரவிக்கப்பட உள்ள மாணவர்களின் எண்ணிக்கையைப் பார்க்குமிடத்து புலனாகிறது. ஒரு கூட்டுறவு அமைப்பின் உண்மையான கூட்டுறவுக் கொள்கைகளை (8ம் பக்கம் பார்க்க)

# வலிகாமம் கொத்தணியின் வெள்ளிவிழா, மற்றும் 91வது கூட்டுறவுதின விழாவில் கௌரவிக்கப்பட்ட அங்கத்தவர், பணியாளர், அவர்கள்பிள்ளைகள் மற்றும் சங்கங்கள்

**சிறந்த அங்கத்தவர், பணியாளர்**

**சங்கானை சங்கம்:** ச.குயின்ரன் டொமினிக், வே.செ.செல்வராசா, கு.நாகேந்திரம் (அங்க.)
செ.சசிதரன், கா.முத்துராசா, தி.பிறேமச்சந்திரன் (பணியாளர்)

**தெல்லிப்பளை சங்கம்:** ஐ.குணரத்தினம், மா.ஜெகபாலச்சந்திரன், சி.சின்னத்தம்பி (அங்.)
ப.மேவின்டயஸ், வை.ரமேஸ், தெ.ரவிக்குமார் (பணியாளர்)

**சுன்னாகம் சங்கம்:** செ.வடிவேல், தி.குணசிங்கம், தி.நவம் (அங்க)
சு.அருட்செல்வம், க.உதயகுமார், மு.சிவநிதி (பணியாளர்)

**மானிப்பாய் சங்கம்:** க.மகிந்தன், அ.ஜோர்ஜ், செ.விமலேஸ்வரன் (அங்கத்தவர்)
செ.கனகலிங்கம், சி.கணேசலிங்கம், வ.புஸ்பராணி (பணியாளர்)

**பண்டத்தரிப்பு சங்கம்:** இ.விஜயகுமார், இ.யோகேஸ்வரன், ப.சிறீரங்கநாதன் (அங்க.)
கி.குணரத்தினம், அ.றெஜினோல்ட், பீ.கொ. பீற்றர் (பணியாளர்)

**கோண்டாவில் சங்கம்:** செ.கணேசவேல், அ.சின்னராசா, யோ.ரஞ்சலிங்கம் (அங்க.)
பொ.யேசுராசா, சு.சிவலிங்கம், பொ.கிருஸ்ணன் (பணியாளர்)

**காரைநகர் சங்கம்:** ச.கிருஸ்ணபவன், து.ரூபன், சு.யோகரத்தினம் (அங்க.)
ப.சுதாகரன், வே.அம்பிகைபாகன், த.கமலநாதன் (பணியாளர்)

**கௌரவிக்கப்பட்ட வலி.கொத்தணியின் பணியாளர்**

க.சுதாகரன், க.சத்தியசீலன், சி.சத்தியபாமா, க.முருகானந்தன், வி.மாலினி, நா.சிவகுமார், சு.கதிர்காமலிங்கம், ப.விஜயராசா, நா.தவனேஸ்வரன், க.விஜயகுமார், மு.அல்பிரட், க.ஜெகநாதன், க.பாஸ்கரன், மா.தவலிங்கம், கி.சத்தியகாந்தன், ச.கனிபாகரன், இ.குகனேஸ்வரன், க.சதானந்தன், இ.தர்மபாலன், க.சுரேஸ்குமார், து.ஜெயக்குமார், மா.விஜயகுமார், சி.கோடீஸ்வரன், தி.ஜீவநாதன், க.மோகனதாஸ், சை.செல்வநாயகம், பா.ஸ்ருதி, ம.றேகா.

**போட்டிகளில் வெற்றிபெற்றோர்**

**அங்கத்தவர் பேச்சு:-**
ஆ.சின்னராசா (கோண்டாவில்) - 1ம் இடம்
க.தவராசா (சுன்னாகம்) - 2ம் இடம்

**அங்கத்தவர் கவிதை:-**
க.தவராசா (சுன்னாகம்) - 1ம் இடம்
அ.சின்னராசா (கோண்டாவில்) - 2ம் இடம்

**பணியாளர் பேச்சு:-**
தே.தவராசா (கோண்டாவில்) - 1ம் இடம்
திருமதி கி.தவம்(மானிப்பாய்) - 2ம் இடம்
வி.சுகந்தினி (காரைநகர்) - 3ம் இடம்

**பணியாளர் கவிதை:-**
த.கமலநாதன்(காரைநகர்) - 1ம் இடம்
தே.தவராசா(கோண்டாவில்) - 2ம் இடம்
ஜே.கர்த்திகா(சுன்னாகம்) - 3ம் இடம்

**மகளிர் குழு உறுப்பினர் பேச்சு:-**
ம.வசந்தி (சுன்னாகம்) - 1ம் இடம்
கா.சந்திரவதனி(கோண்டாவில்) - 2ம் இடம்
வி.சுகந்தினி(காரைநகர்) - 3ம் இடம்

**மகளிர்குழு உறுப்பினர்,முன்பள்ளி ஆசிரியர் கவிதை:-**
கா.சந்திரவதனி(கோண்டாவில்) - 1ம் இடம்
ம.கிளியோப்பெட்ரா(காரைநகர்) - 2ம் இடம்
ம.மன்றோ மெற்றலின்(கோண்டா.) - 3ம் இடம்

**பொறி அறிவுப் போட்டி:-**
த.கமலநாதன்(காரைநகர்) - 1ம் இடம்
ர.சாளினி(மானிப்பாய்) - 2ம் இடம்
கி.தவம்(மானிப்பாய்) - 3ம் இடம்

**வினாடி வினாப் போட்டி:-**
மானிப்பாய் சங்கம் - 1ம் இடம்
கோண்டாவில் சங்கம் - 2ம் இடம்

**கயிறிழுத்தல் போட்டி:-**
கோண்டாவில் சங்கம் - 1ம் இடம்
பண்டத்தரிப்பு சங்கம் - 2ம் இடம்

**கிரிக்கெட் போட்டி:-**
பண்டத்தரிப்பு சங்கம் - 1ம் இடம்
தெல்லிப்பளை சங்கம் - 2ம் இடம்

**சிறந்த சங்கத் தெரிவு:-**
கோண்டாவில் சங்கம் - 1ம் இடம்
பண்டத்தரிப்பு சங்கம் - 2ம் இடம்
தெல்லிப்பளை சங்கம் - 3ம் இடம்

**தரம் 5 புலமைப்பரிசில் சித்தி:-**
த.அபிசா(சங்கானை), த.தனுசாந்(தெல்லிப்பளை), த.சகீம், சு.திலக்சன்(சுன்னாகம்), கு.விஜிதரன்(கோண்டாவில்), ச.இராகுலன் (வலி. கொத்தணி)

**க.பொ.த.(சா/த) சித்தி (உ/த. கற்.)**
டெ.டினோசன்(சங்கானை), மே.சுபேசன், சி.விதுசனா, கு.சுகிர்தன், பா.குகின்ராஜ், கு.சரண்சியா(தெல்லிப்பளை), த.தனிஸ்வரன், ச.சஜீபன், வி.பவித்ரா, இ.விஜிதா, சி.அனுசியா, வி.மேரிநித்யா, ர.இராஜ்குமார் (சுன்னாகம்), சொ.நிலானி, அ.டிலக்சன், அ.சர்மிலா, கி.விதுசா (கோண்டாவில்), ம.லக்சனா, ஜோ.விதுசா, ம.தகானா, அ.தர்சிகா, தே.சிறோஜினி, ஜெ.அனோஜன், டே.டெமன்சியா, இ.பேபிசாளினி, வி.குயின்சாயினி (பண்டத்தரிப்பு), த.றஜீவன், கு.அபிராமி, ந.பிரின்சியா, ச.விகாஸ், சு.திலக்ஷனா (மானிப்பாய்)

**க.பொ.த(உ/த) சித்தி (உயர் கல்வி)**
கு.தனஞ்சன்(தெல்லிப்பளை), க.ஜெனார்சன், பா.அனுலா, வி.மிதிர்லா, ம.சோபிதா, செ.உமாஜினி (கோண்டாவில்), செ.தர்ஷிக்கா, மு.பிரிந்தா, மு.ஜனனி (சுன்னாகம்)

**உயர் கல்வியில் பட்டம் பெற்றவர்**
சி.லக்சாயினி (தெல்லிப்பளை)

இத்துடன் வலிகாமம் கொத்தணியின் அங்கத்துவ சங்கங்களின் அங்கத்தவர்களுக்கான ஓய்வுநலக் கொடுப்பனவுத் திட்டத்தின்கீழ், சங்கானை சங்கத்தைச் சேர்ந்த 15 உறுப்பினர்களுக்கு மொத்தம் ரூபா 63,500 உம், தெல்லிப்பளை சங்கத்தைச் சேர்ந்த 7 உறுப்பினர்களுக்கு மொத்தம் ரூபா 30,500 உம், பண்டத்தரிப்பு சங்கத்தைச் சேர்ந்த 7 உறுப்பினர்களுக்கு மொத்தம் ரூபா 29,000உம், மானிப்பாய் சங்கத்தை சேர்ந்த 12 உறுப்பினர்களுக்கு மொத்தம் ரூபா 50,500உம், கோண்டாவில் சங்கத்தைச் சேர்ந்த 11 உறுப்பினர்களுக்கு மொத்தம் ரூபா 46,000உம், காரைநகர் சங்கத்தைச் சேர்ந்த 7 உறுப்பினர்களுக்கு மொத்தம் ரூபா 31,500உம் கொடுப்பனவாக வழங்கப்பட்டதுடன், கோண்டாவில் சங்கத்தைச் சேர்ந்த வீ.நாகலிங்கம், சங்கானை சங்கத்தைச் சேர்ந்த த.இராசதுரை ஆகியோரின் விபத்து மரணக்கொடுப்பனவாக தலா ரூபா 10,000உம் வழங்கப்பட்டன.

## 91வது கூட்...1ம் பக்கத் தொடர்ச்சி

யாழ்.கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு தி.சுந்தரலிங்கம், மாவட்ட கூட். அ.அலுவலர் திரு பொ.மோகன் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக தலைமைக் காரியாலய கூட். அபி.அலுவலர்களான திரு தி.வித்தககலாநிதி, திரு இ.விஜயமோகனராஜா, திருமதி உ.பாலகிருஸ்ணன், யாழ்.கூட்.சபை செயலாளர் திருமதி வே.செல்வரத்தினம், சமாச பொது முகாமையாளர் திரு ஜே.பி.குணரத்தினம், கூட்.அபி. அலுவலர்களான திரு தா.தவமன்னன், திரு க.கமலநாதன், வலி.கொத்தணி பொது முகாமையாளர் திரு க.சுதாகரன், யாழ்.மாவட்ட ப.தெ.வ.அ.கூ.நிறு. பணியாளர் நலன்புரி கூட்.சங்கத் தலைவர் திரு சு.சிறீகாந், யாழ். மாவட்ட கூட்.பணியாளர் நலநோன்புக் கூ.சங்க தலைவர் திரு கா.சிவஞானம், வடமராட்சி, தென்மராட்சி கொத்தணிகளின் தலைவர், பொது முகாமையாளர், தெல்லிப்பளை, சங்கானை, பண்டத்தரிப்பு, சுன்னாகம், மானிப்பாய், காரைநகர் ப.தெ.வ.அ. கூ.சங்கங்களின் தலைவர், செயலாளர், பொதுமுகாமையாளர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஒரு கூட்டு....3ம் பக்கத் தொடர்ச்சி

எமது அறிவைக் கொண்டு சிந்தித்து செயலாற்றலாம். அதுபோலவே இக்கூட்டுறவு அமைப்பிலும் அங்கத்தவர்களும் பணியாளர்களும் விசுவாசமாகவும் செயற்றிறனுடனும் விளங்கும்போதுதான் நிறுவனம் அபிவிருத்தியடைந்து இலாபம் ஈட்டும்போது அங்கத்தவர் சார்ந்த சமூக நலத்திட்டங்களை நிறைவேற்றுவதுடன், முக்கியமாக அங்கத்தவர், பணியாளர்களின் பிள்ளைகளின் கல்வியை சிறப்பான முறையில் வளர்த்தெடுக்க முடியும்.

எனவே, கூட்டுறவு அமைப்பானது ஒன்றுசேர்ந்து உழைக்கும் ஒரு புனிதமான நிறுவனமாகும். அதாவது அங்கத்தவர்கள், பணியாளர்கள் இக்கூட்டுறவு அமைப்பின் இரு கண்கள் போன்றவர்கள் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

## சாவகச்சேரி சங்கத்தின் கிளைப் பணியாளருக்கான பயிற்சி

சாகவச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை முகாமையாளர், விற்பனை உதவியாளர்கள் ஆகியோருக்கான பயிற்சிநெறி ஒன்று சமாசத்தால் இம்மாதம் 25ம் திகதி நடத்தப்படவுள்ளது.

மேற்படி சங்கத்தின் தலைவர் திரு கி.பூபாலசிங்கம் அவர்கள் தலைமையில் சங்க மண்டபத்தில் இப்பயிற்சியை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் கிளை முகாமையாளர்களின் படிவங்கள் தொடர்பாகவும், கணக்கு வைத்தல் முறை தொடர்பாகவும், கிளை நிலையங்களின் நவீன செயற்பாட்டின் முக்கியத்துவம் தொடர்பாகவும் சமாச கல்வி உத்தியோகத்தரால் கருத்துரைகள் வழங்கப்படவுள்ளன.

## விபத்து மற்றும் மரண நிதி வழங்குவதற்கு ஏற்பாடு!

கூ.ஆ.உ.ஆணையாளரின் அனுமதியின்கீழ் சமாசத்தால் விபத்து, மற்றும் மரண நிதி வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதில் பருத்தித்துறை சங்கத்தின் ஒரு அங்கத்தவருக்கு மரண நிதியும், 2 அங்கத்தவருக்கு விபத்து நிதியும், அரியாலை சங்கத்தின் ஒரு அங்கத்தவருக்கு மரண நிதியும், பண்டத்தரிப்பு சங்கத்தின் ஒரு அங்கத்தவருக்கும், சாவகச்சேரி சங்கத்தின் ஒரு அங்கத்தவருக்கும், தெல்லிப்பளைச் சங்கத்தின் ஒரு அங்கத்தவருக்கும், சுன்னாகம் சங்கத்தின் ஒரு அங்கத்தவருக்கும், சங்கானை சங்கத்தின் 6 அங்கத்தவர்களுக்கும் விபத்து நிதியுமாக மொத்தம் 1 இலட்சத்து 8 ஆயிரத்து 134 ரூபா வழங்கப்படவுள்ளன.

**தேவையான....2ம் பக்கத் தொடர்ச்சி**

கடைப்பிடிக்கின்ற நிறுவனங்களே இவ்வகையான செயற்பாடுகளில் அதாவது, சமூகத்தின் மீதான அக்கறை என்ற கூட்டுறவுக் கொள்கைக்கு ஏற்ப செயற்பட முடியும் என்பதை பனை தென்னை வள நிறுவனங்கள் நிறைவேற்றியிருக்கின்றன என்று குறிப்பிட்டார்.

மக்கள் வங்கியின் சுன்னாகம் கிளையின் முகாமையாளர் தனதுரையில், எமது வங்கியுடன் நீண்டகாலம் தொடர்பினை ஏற்படுத்திக்கொண்ட நிறுவனங்களில் பனை தென்னை வள நிறுவனங்கள் முன்னிலை வகிக்கின்றன. இந்நிறுவனங்களின் நம்பிக்கைக்குரிய வங்கியாக மக்கள் வங்கி செயற்படுவதோடு, இந்நிறுவனங்களின் செயறபாடுகளுக்கு எப்பொழுதும் உதவுவதற்கு தயாராகவுள்ளோம் என்று குறிப்பிட்டார்.

**முன்பள்ளி .....1ம் பக்கத் தொடர்ச்சி**

சமாச கல்வி உத்தியோகத்தர் திரு வ.சிவகுமார் அவர்களால் நடத்தப்பட்டது.

இப்பயிற்சி நெறியில் சங்கத்தினால் நடத்தப்படுகின்ற முன்பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். சங்கத்தின் பொதுமுகாமையாளர் திரு சற்குணலிங்கம், பண்டத்தரிப்பு சங்கத்தின் கல்வி உத்தியோகத்தர் திரு ஆ.கிறிஸ்துராசா ஆகியோரும் கலந்துகொண்டு கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடு தொடர்பாகவும் முன்பள்ளி மாணவர்களின் கல்வியின் முக்கியத்துவம் தொடர்பாகவும் கருத்துரை வழங்கினர்.

**கிளை முகா....1ம் பக்கத் தொடர்ச்சி**

இப்பயிற்சிக் கலந்துரையாடலில் சமாச கல்வி உத்தியோகத்தர் கலந்துகொண்டு கிளை முகாமையாளர்களின் கடமைகளும் பொறுப்புக்களும் தொடர்பாக கருத்துரை வழங்கியதோடு. யாழ். மாவட்ட பனை தென்னை வள அ.கூ.நிறு.பணியாளர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு சு.சிறிகாந், பொருளாளர் திரு சு.சிவலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டு தமது சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக கருத்துரை வழங்கினார்கள்.


எமது மண்ணின் தனித்துவமான வளமான பனை வளத்தை பாதுகாத்து, வளப்படுத்தி எமது பொருளாதாரத்தை மேம்படுத்தப் பாடுபடுவோம்!

எமது உற்பத்திகள்

- ஒடியல்
- புழுக்கொடியல்
- பனாட்டு




போத்தலில் அடைக்கப்பட்ட பனங்கள்

எமது சேவைகள்



கிராமிய வங்கிச் சேவை



இரு சக்கர உழவு இயந்திர (லாண்ட் மாஸ்ரர்) சேவை

காரைநகர் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
அல்லின் வீதி, காரைநகர். T.P: 021 373 7754


இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு, இல.52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2013ம் ஆண்டு நவெம்பர் மாதம் வெளியிடப்பட்டது.